**<u>நீதித்துறை நடுவர், (விரைவு நீதிமன்றம்), ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.</u>**

**முன்னிலை: திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.**

**நீதித்துறை நடுவர், (விரைவு நீதிமன்றம்), ஓசூர்.**

**<u>2026 - ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30-ம் நாள் திங்கள்கிழமை</u>**

**<u>ஆண்டு பட்டிகை வழக்கு எண்: 490/2016</u>**

**<u>தீர்ப்பு நாள் :30.03.2026</u>**

**<u>CNR NO:TNKI10-000354-2016</u>**

**<u>அரசுக்காக:-</u>**

சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்,

மத்திகிரி காவல் நிலையம்,

குற்ற எண் - 161/2014. ... குற்றமுறையீட்டாளர்

/எதிராக/

கார்த்திக் (வயது - 30/2014),

த/பெ. ராமன்,

ஏர்தாங்கல் கிராமம் மற்றும் அஞ்சல்,

குடியாத்தம் தாலுக்கா,

வேலூர் மாவட்டம்.

(எதிரி, வயது மற்றும்

விலாசம் இறுதியறிக்கையின்படி .... எதிரி

**<u>குற்றவியல் நடைமுறை விதி 106 ன் கீழான விவர பட்டியல்</u>**

| | | குற்றஞ்சாட்டப்பட்டவரின் விவரம் | | | | |
|---|---|---|---|---|---|---|
| வரிசை எண் | பெயர் | தந்தை /கணவர் பெயர் | இனம் அல்லது சாதி | தொழில் | இருப்பிடம் | வயது |
| 1 | கார்த்திக் | ராமன் | இந்து | - | ஏர்தாங்கல் கிராமம் மற்றும் அஞ்சல்,<br>குடியாத்தம் தாலுக்கா,<br>வேலூர் மாவட்டம் | 30/2014 |

| நிகழ்வு | முறையீடு | கைது அல்லது முன்னிலை | பிணையின் பேரில் விடுதலை | விசாரணையின் தொடக்கம் | விசாரணையின் முடிவு | தண்டனை அல்லது ஆணை | தாமதத்திற்க்கான விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| 23.09.2014 | 23.09.2014 | 23.09.2014 | 23.09.2014 | 12.03.2026 | 12.03.2026 | 30.03.2026 | -- |

## சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021-ம் தேதியிட்ட Roc.No.814/2020/RG/F1-ன் படியும் மற்றும் குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 ன் கீழ் விதி 106(4)ன் படி வழக்கின் சுருக்கம்

| | | |
|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்ட நாள் | - |
| 2. | இறுதியறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 16.09.2015 |
| 3. | முதன்மை பதிவேட்டு வழக்கு மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள் | --- |
| 4. | எதிரியிடம் கு.வி.மு.ச. 240 பிரிவின் கீழ் வினவிய நாள் | 27.01.2026 |
| 5. | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பல்வகை மனுவின் விவரம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | குற்றப்பல்வகை மனு எண். | உத்தரவு அனுமதிக்கப்பட்டது /தள்ளுபடி செய்யப்பட்டது | மேல்முறையீட்டு வழக்கு விவரம் | |
| | Crl.M.P.No.5004/2014, dt: 11.10.2014, U/s.437 Cr.P.C. | அனுமதிக்கப்பட்டது | இல்லை | |
| | Crl.M.P.No.5451/2014, dt: 30.10.2014, U/s.439 Cr.P.C. | அனுமதிக்கப்பட்டது | இல்லை | |
| | Crl.M.P.No.332/26,dt: 12.03.2026 U/s.311 Cr.P.C. | அனுமதிக்கப்பட்டது | இல்லை | |
| | சாட்சிகள் விசாரித்த நாட்களின் விவரம் | | | |
| | சாட்சிகள் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் | |
| | திரு. நாராயணரெட்டி | 12.03.2026 | 12.03.2026 | அ.சா.1 |
| | திரு. நாகராஜ்ரெட்டி | 12.03.2026 | 12.03.2026 | அ.சா.2 |
| | திரு. சிவஞானம் | 12.03.2026 | 12.03.2026 | அ.சா.3 |
| 7. | எதிரியிடம் கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவப்பட்ட நாள் | | | 16.03.2026 |
| 8. | எதிரி தலைமறைவு ஆகிய நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகிய /ஆஜர்படுத்தப்பட்ட நாட்கள் | | | --- |
| 9. | மாண்புமிகு மேலமை நீதிமன்றத்தின் உத்தரவு படி வழக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால் அதன் விவரம் மற்றும் தீர்வு | | | --- |

இவ்வழக்கு நீதித்துறை நடுவர் எண் - 2, ஒசூர் நீதிமன்றத்தினால் CC

No:251/2015 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு அதன் பின்னிட்டு இவ்வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு [நீதித்துறை நடுவர், (விரைவு நீதிமன்றம்), ஒசூர்] விசாரணைக்காக மாற்றலாகியுள்ள காரணத்தினால், இந்நீதிமன்றத்தினால் CC No:490/2016 என்ற ஆண்டு பட்டிகை வழக்கு எண் வழங்கப்பட்டு விசாரணையானது தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளது. இவ்வழக்கில், அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. V. கனிமொழி அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.பிரகாஷ் அவர்கள் ஆஜராகியும், இறுதியாக இவ்வழக்கு கடந்த 24.03.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு ஆவணங்களை நன்கு பரிசீலித்தும், இருதரப்பையும் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ...

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது மத்திகிரி காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரிக்கு எதிராக இந்திய தண்டனைச்சட்டம் பிரிவுகள் 454 மற்றும் 511 -ன் கீழ் குற்ற எண்.161/2014 என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் பேரில் தொடரப்பட்டதாகும்.

**<u>2) இறுதியறிக்கையில் கண்டுள்ள குற்றச்சாட்டின் சுருக்கம்:</u>**

கடந்த 23.09.2014 -ம் தேதி பிற்பகல் 1.00 மணியளவில் மத்திகிரி காவல் நிலைய சரகம் உளிவீரனப்பள்ளி கிராமம் போடி ரெட்டி மகன் நாராயண ரெட்டி என்பவரது பூட்டியிருந்த வீட்டில் மார்ஜினில் கண்ட எதிரி கார்த்திக், த/பெ. ராமன் என்பவர் கையில் பிடிக்கககூடிய ஒரு கல்லால் பூட்டியிருந்த வீட்டின் பூட்டினை உடைத்து திருட முயற்சித்ததாக குறிப்பிட்டு எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 454 மற்றும் 511-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த இறுதியறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த ஆவணங்களை பரிசீலனை செய்து வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி அழைப்பாணையை பெற்று எதிரி ஆஜராகியிருந்த தேதியன்று வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.விமு.ச. பிரிவு 207-ன் கீழ் எவ்வித காலதாமதமுமின்றி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4) அரசு தரப்பில் தாக்கல் செய்திருந்த இறுதியறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த இறுதியறிக்கை மற்றும் குற்றத்தின் சாராம்சங்களை கு.வி.மு.ச பிரிவு 240 -ன் கீழ் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 454 மற்றும் 511 -ன் கீழ்

குற்றசாட்டு விளக்கி கூறி வினவியபோது, எதிரியானவர் தனக்கு எதிரான குற்றச்சாட்டை மறுத்துரைத்து வழக்கினை விசாரணை செய்திட வேண்டுமென கோரியதன் அடிப்படையில் இவ்வழக்கானது விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

5) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளாக அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு மேற்படி சாட்சிகளின் மூலமாக அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6) அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்**

கடந்த 23.09.2014 -ம் தேதி பிற்பகல் 1.00 மணியளவில் மத்திகிரி காவல் நிலைய சரகம் உளிவீரனப்பள்ளி கிராமம் போடி ரெட்டி மகன் நாராயண ரெட்டி என்பவரது பூட்டியிருந்த வீட்டில் மார்ஜினில் கண்ட எதிரி கார்த்திக், த/பெ. ராமன் என்பவர் கையில் பிடிக்ககூடிய ஒரு கல்லால் பூட்டியிருந்த வீட்டின் பூட்டினை உடைத்து திருட முயற்சித்ததாக குறிப்பிட்டு எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 454 மற்றும் 511 -ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்குரிய இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு அரசு தரப்பில் சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

7) அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து தெரிய வரும் அரசு வழக்கின் சுருக்கம் என்னவென்றால், **அ.சா.1 திரு.நாராயணரெட்டி** என்பவர்

இவ்வழக்கின் வாதி எனவும், இவர் சம்பவத்தை பற்றியும், எதிரியை கையும் களவுமாக பிடித்து வந்து காவல் நிலையத்தில் எதிரியை ஒப்படைத்து மேல் நடவடிக்கை கேட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது பற்றியும், மேலும் புகார் மனுவிலுள்ள தனது கையொப்பம் **அ.த.சா.ஆ.1 எனவும், அ.சா.2 திரு.நாகராஜ்ரெட்டி** என்பவர் வாதியுடன் சம்பவ இடம் சென்று எதிரியை கையும் களவுமாக பிடித்து வந்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தது பற்றியும் மற்றும் வழக்கின் வாதி காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தது பற்றியும், இவ்வழக்கில் வாதியிடம் இருந்து புகாரை பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயாரித்து மற்றும் எதிரியை கைது செய்தது மற்றும் எதிரியின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.ஜெயபால் என்பவர் வழக்கிலிருந்து விலக்களிக்கப்பட்டதால் அவர்களுக்கு பதிலாக மத்திகிரி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் **திரு. சிவஞானம் என்பவர் மனு அடிப்படையில் அ.சா.3 ஆக** சாட்சியம் அளித்துள்ளதாகவும், மேற்படி புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.2 மற்றும் 3 எனவும்,** மேற்படி மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் முறையே **அ.த.சா.ஆ.4 மற்றும் 5** எனவும், மேற்படி கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.6 எனவும்**, மேற்படி படிவம் 91 **அ.த.சா.ஆ.7 எனவும்**, மேலும் வழக்கு சொத்தான கருங்கல் **சா.பொ.1 எனவும்,** சாட்சியம் அளித்து ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8) அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டிருந்த சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக அமைந்துள்ள சூழ்நிலைகள் குறித்து எதிரியிடம் குவி.மு.ச. பிரிவு 313 (1) (b)-ன் கீழ்எடுத்துரைத்து வினவியபொழுது எதிரி அரசு தரப்பில் பொய் சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், அரசு தரப்பில் பொய் சாட்சி, பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரி தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் எந்த சாட்சியும் விசாரணை செய்யப்பட்டு சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

9) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் சீராய்ந்து பரிசீலனை செய்யப்பட்டன.

10) அரசு தரப்பில் வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்திருப்பதாகவும், எனவே எதிரிக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

11) எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், அரசு தரப்பு சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு முரணான வகையில் சாட்சியம் அளித்திருப்பதாகவும், அரசு தரப்பில் வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யவேண்டுமென்று கூறி வாதிட்டார்.

**12) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

**எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 454 மற்றும் 511 -ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பினால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**13) எதிரிக்கு எதிரான இ.த.ச பிரிவுகள் 454 மற்றும் 511 -ன் கீழான குற்றச்சாட்டு குறித்த விவாதம்**

a) கடந்த 23.09.2014 -ம் தேதி பிற்பகல் 1.00 மணியளவில் மத்திகிரி காவல் நிலைய சரகம் உளிவீரனப்பள்ளி கிராமம் போடி ரெட்டி மகன் நாராயண ரெட்டி என்பவரது பூட்டியிருந்த வீட்டில் கையில் பிடிக்ககூடிய ஒரு கல்லால் பூட்டியிருந்த வீட்டின் பூட்டினை உடைத்து திருட முயற்சித்ததாக குறிப்பிட்டு அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள சாட்சியங்களுக்கு எதிரி தரப்பில் எவ்விதமான மறுப்புரையும், சாட்சியங்களின் வாயிலாகவோ அல்லது சான்றாவணங்கள் வாயிலாகவோ தெரிவிக்கப்படவில்லை. எனவே கடந்த கடந்த 23.09.2014 -ம் தேதி பிற்பகல் 1.00 மணியளவில் மத்திகிரி காவல் நிலைய சரகம் உளிவீரனப்பள்ளி கிராமம் போடி ரெட்டி மகன் நாராயண ரெட்டி என்பவரது பூட்டியிருந்த வீட்டில் கையில் பிடிக்ககூடிய ஒரு கல்லால் பூட்டியிருந்த வீட்டின் பூட்டினை உடைத்து திருட முயற்சித்ததாக அரசு தரப்பில் சொல்லிய சங்கதிகள் உரிய வகையில் சந்தேகத்திற்கு இடமளிக்காமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

b) **இருப்பினும் இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள வாதி திரு.நாராயணரெட்டி என்பவரின் பூட்டியிருந்த வீட்டில் இவ்வழக்கின் எதிரி**

**தான் திருட முயற்சி செய்தாரா என்பது குறித்து சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களுடன் ஒன்றிணைத்து சீராய வேண்டியது அவசியமாகும்.**

c) இவ்வழக்கின் புகார்தாரர் நாராயணரெட்டி அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு என்று அவர் தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரியை தெரியாது என்றும், புகாரில் என்ன விவரங்கள் எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றும், போலிஸார் கையொப்பம் கேட்டதால் கையொப்பம் செய்ததாகவும், எந்த வழக்கிற்கு கையொப்பம் செய்தேன் என்று தெரியாது என்றும், வழக்கு பற்றி எந்த விவரங்களும் தனக்கு தெரியாது என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்ட வகையில் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 புகார் மனுவில் உள்ள கையொப்பத்தை மட்டும் ஒப்பு கொண்டுள்ளார். அ.சா.1 தனது புகார் மனுவில் உள்ள விவரங்கள் தனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்திருப்பது அரசு தரப்பில் சொல்லப்பட்டவாறு சம்பவம் நடந்ததா என்று சந்தேகம் கொள்ளத்தக்க வகையில் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

d) மேலும் சம்பவத்தை நேரில் பார்த்ததாக விசாரிக்கப்பட்டுள்ள திரு.நாகராஜ்ரெட்டி அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில் **"ஆஜர் எதிரியை தெரியாது என்றும், வழக்கு பற்றி எந்த விவரங்களும் தெரியாது என்றும், போலிஸார் விசாரிக்கவில்லை"** என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்ட வகையில் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி புகார் மனுவினை ஒத்து அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. மேலும் அ.சா.1

மற்றும் அ.சா.2 சாட்சிகள் ஆஜர் எதிரியை அடையாளம் காட்டி சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. இந்நிலையில் அரசு தரப்பில் வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

e) மேலும் இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரிக்கு பதிலாக மனுவின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.3 ன் சாட்சியத்தை மட்டும் வைத்து அரசு தரப்பில் வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்திருப்பதாக எடுத்து கொள்ள முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அரசு தரப்பில் பிற பட்டியல் சாட்சிகள் வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கப்படுவதிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். மேலும் அவர்கள் யாரும் நீதிமன்றத்தில் ஆஜராகி அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் வகையில் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. எந்தவொரு சாட்சியும் ஆஜர் எதிரி தான் அ.சா.1 ன் வீட்டை கல்லால் உடைத்து திருட முயற்சி செய்ததாக ஆஜர் எதிரியை அடையாளம் காட்டி குறிப்பிட்டு சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

f) மேலும் அ.த.சா.ஆ.1 புகார் மனுவினை ஒத்துரைக்கும் வகையில் எந்தொரு தனிநபர் சாட்சியும் சாட்சியம் அளிக்கவில்லை. இவ்வாறாக அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களுக்கு இடையே உள்ள முரண்பாடுகளுக்கு எவ்விதமான விளக்கங்களும், காரணங்களும் அரசு தரப்பில் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் அளிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம்

கருதுகிறது.

g) மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களுக்கு இடையே உள்ள முரண்பாடுகள், பூட்டினை உடைத்து திருட முயற்சித்ததாக சொல்லப்படும் விதம், எதிரியை அடையாளம் காட்டப்படாமை, சாட்சிகளின் நம்பகத்தன்மை மற்றும் இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்ட விதம் ஆகியவை குறித்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமளிக்காத வகையில் ஏற்கத்தக்க உரிய விளக்கங்கள் மற்றும் காரணங்கள் ஏதும் அளிக்கப்படாததால் அரசு தரப்பானது எதிரிக்கு எதிரான வழக்கினை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக,

(i) எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 454 மற்றும் 511 -ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளிப்பது நீதியின்பாற்பட்டது என்று இந்நீதிமன்றம் கருதுவதால் சந்தேகத்தின் பலனை இவ்வழக்கின் எதிரிக்கு அளித்து எதிரியை இவ்வழக்கின் குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்து உத்தரவிடப்படுகிறது.

(ii) இவ்வழக்கில் C.P No. 280/2016 என்ற வழக்கு சொத்தான சுமார் 1/2 கிலோ எடையுள்ள கருங்கல்லை இவ்வழக்கின் வாதி நாராயணரெட்டி மனு செய்து

பெற்றுக்கொள்ளாத பட்சத்தில் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிப்பு செய்து உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 30-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஓம் - திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஒசூர்.

**அரசுத்தரப்பு சாட்சிகள்**:-

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. நாராயணரெட்டி | - | அ.சா.1 |
| 2 | திரு. நாகராஜ்ரெட்டி | - | அ.சா.2 |
| 3 | திரு. சிவஞானம் | - | அ.சா.3 |

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள்**:-

| | | | |
|---|---|---|---|
| 1 | புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் - அசல் | - | அ.த.சா.ஆ.1 |

| | | |
|---|---|---|
| 2 | புகார் மனு - அசல் | - அ.த.சா.ஆ.2 |
| 3 | முதல் தகவல் அறிக்கை - அசல் | - அ.த.சா.ஆ.3 |
| 4 | மாதிரி வரைபடம் - அசல் | - அ.த.சா.ஆ.4 |
| 5 | பார்வை மகஜர் - அசல் | - அ.த.சா.ஆ.5 |
| 6 | கைப்பற்றுதல் மகஜர் - அசல் | - அ.த.சா.ஆ.6 |
| 7 | படிவம் -91 - அசல் | - அ.த.சா.ஆ.7 |

**சான்று பொருள்:**

1. சுமார் 1/2 கிலோ எடையுள்ள கருங்கல் - சா.பொ.1

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை.

ஒம் - திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஓசூர்.

**பின்குறிப்பு:-**

1) வழக்கு விசாரணையின் பொழுது எதிரி நீதிமன்ற பிணையிலிருந்தார்.

2) வழக்கு முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

3) வழக்கு விசாரணையின்பொழுது எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கவில்லை.